12.11.2025

OS No: 133/2015

பி.வா.சா.2 திரு. பழனிச்சாமி த/பெ. வெள்ளைக்கண்ணு

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனது சொந்த ஊர் கல்லம்பட்டியா மூவன்பட்டியா டி களப்பூரா என்றால் மூவன்பட்டி ஆகும். எனது ஊருக்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் எட்டு கிலோமீட்டர் இருக்கும். தாவா சொத்திற்கான சர்வே எண் விஸ்தீரணம் நான்குமால் தெரியுமா என்றால் தெரியாது. 4ம் பிரதிவாதி கணவர் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால் களப்பூரை சேர்ந்தவர். 4ம் பிரதிவாதி விஜயா எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால் களப்பூரை சேர்ந்தவர். 4ம் பிரதிவாதிக்கு களப்பூரில் சொந்தமாக வீடு உள்ளதா அவ்வாறு இருந்தால் அதன் சர்வே எண் என்ன என்றால் அது பற்றி தெரியாது மேற்படி விஜயா வீட்டிற்கு கடந்த 15 வருடங்களாக கூலி வேலைக்கு சென்று வருகிறேன். நான் கொத்தனார் வேலையோ காண்ட்ராக்ட் வேலையோ பார்க்காமல் எடுபிடி வேலைதான் பார்க்கிறேன் என்றால் கொத்தனார் வேலை பார்க்கவில்லை காண்ட்ராக்ட் வேலையும் பார்க்கவில்லை.
2. மண்வெட்டி வேலையும் செடி கொடிகளை சுத்தம் செய்யும் வேலையும் பார்க்கிறேன். லட்சுமணன் ஒன்றாம் பிரதிவாதியிடம் தாவா பி அட்டவணை சொத்தை எந்த தேதியில் கிரையம் வாங்கினார் என்றால் தெரியாது 2010ம் வருடம் கிரயம் வாங்கியதாக சொல்லி உள்ளார். கிரைய பத்திரம் ஏற்படுத்தியன்றோ நிறைய பணம் கொடுத்த அன்றோ நான் உடன் செல்லவில்லை என்றால் சரிதான். ஓட்டு வீடு எவ்வளவு நீள அகலத்திலும் அலுவலகம் எவ்வளவு நீல அகலத்திலும் கட்டப்பட்டுள்ளது என்றால் ஒன்றரைச் செண்ட்டில் கட்டப்பட்டுள்ளது குறிப்பாக எவ்வளவு நீள அகலம் என்று எனக்கு தெரியாது. 4ம் பிரதிவாதி விஜயாவும் அவரது கணவரும்

மேற்படி பி அட்டவணை சொத்து வீட்டில் குடியிருந்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விஜயாவும் அவரது கணவரும் முப்பது வருடமாக காரைக்குடியில் தான் நிரந்தரமாக குடியிருந்து வருகிறார்கள் என்றால் தெரியாது.

3. எந்த தேதியில் வருடத்தில் மாதத்தில் தாவா சொத்துக்களை வாதிகளும் 1, 2 பிரதிவாதிகளும் ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்றால் தெரியாது. 1ம் வாதியான பூங்கோதையும் 1ம் பிரதிவாதியான மூக்காயியை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி ஒன்றாம் வாதி ஒன்றாம் பிரதிவாதி ஆகியோர்களின் கணவரான விஸ்வநாதன் தாவா பி அட்டவணை சொத்தை கிரையம் வாங்கிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா பி அட்டவணை சொத்து சம்பந்தமாக விஜயா அவர்கள் புகார் கொடுத்ததாக சொல்வது தெரியுமா என்றால் நானும் சென்றிருந்தேன் எதிர்மனுதாரர்கள் வரவில்லை. மேற்படி புகாரில் யார் யார் எதிர்மனுதாரர்களாக குறிப்பிடப்பட்டிருந்தார்கள் என்றால் தெரியாது. எந்த தேதி வருடம் மாதம் ஆகியவற்றில் மேற்படி புகார் கொடுக்கப்பட்டது என்றால் தெரியாது. தாவா பி அட்டவணை சொத்தில் அலுவலகம் இல்லை என்றும் வீடு மட்டுமே உள்ளது என்றால் சரி அல்ல. சொத்து விவரம் எனக்கு தெரியாது என்றும் மேற்படி வீட்டை நான் ஆட்களை வைத்து கட்டவில்லை என்றால் சரியல்ல. விஜயா வீட்டில் நான் பல காலமாக வேலை பார்த்து வருவதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.11.12 17:05:46 +0530